

# ஞானஸ்நானம்

வேதத்திலே மனிதன் தோன்றிய அல்லது உருவான கால முதல் சரீர பரிசுத்தமாகுதலை நாம் காண முடியும். ***சரீர பரிசுத்தமாகுதல் எதற்கு?*** ஏவாள் தேவனின் அன்பு வார்த்தைகளை உதறி தள்ளிவிட்டு, பிசாசின் ஆசை வார்த்தைகளை நாடினதின் விளைவாக, சரீரம் அசுத்தப்பட்டுப்போனது. தேவ மகிமையான பரிசுத்த ஆவியானவர் மனுஷனின் ஆத்துமாவில் வாசம் செய்ய விரும்புவதால், அந்த ஆத்துமாவை தாங்கும் அச்சரீரம் முதலாவதாக பரிசுத்தத்தை பெற வேண்டும் என்று எண்ணி, ஏதேனில் மனுஷனுக்கும், மனுஷிக்கும், பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளும் தகுதியை அடையும்படி, தோலாடைகளை உடுத்துவித்தார் பரம தந்தை. தோலாடைக்காக, விலங்குகளின் இரத்தத்தை பாவ நிவாரண பலியாக செலுத்தினார் இறைவன் (ஆதியாகமம் 3:21). இரத்தம் சிந்தி சரீர சுத்தமான முதல் குடும்பம், மனச்சுத்தமின்றி, அதாவது **ஆத்தும அழுக்கிலே தங்களது வாழ்க்கையை துவக்கினார்கள்** (ஆதியாகமம் 4:1).

ஆத்தும அழுக்கினாலே உருவான பிள்ளைகள், இப்போது தேவனுடைய கிருபையினாலே பரிசுத்தமடைய வேண்டும்; நன்மையை தெரிந்து கொண்டு. ஆதியாகமம் 4:7ல், இவ்வாறு வாசிக்கின்றோம், "**நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ**?

நீ நன்மை செய்யாதிருந்தால் பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்; பாவத்தின் ஆசை உன்னைப்பற்றியிருக்கும்". பாவத்தின் ஆசை நம்மைப்பற்றி பிடிக்கும் வேளையில், நாம் அதை ஆண்டுகொள்ள வேண்டும் என்று கர்த்தர் கூறுகின்றார். இது எப்படி சாத்தியமாகும்? பிசாசுதான் எப்பொழுதும் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி (plan systematically) சுற்றித்திரிவதாக வேதம் சொல்கின்றதே! **என்ன செய்வது?**

தேவன் காயினைப்பார்த்து கேட்ட அதே கேள்வியைத்தான் இன்று நம்மைப்பார்த்தும் கேட்கின்றார்; "நீ நன்மை செய்தால் மேன்மையில்லையோ".

**நன்மையென்றால் என்ன? எப்படி நாம் நன்மை செய்வது?**

நல்ல குணாதிசியங்களை (characters) கொண்ட மனதை பெறுவதே, நாம் இந்த வாழ்வில் அடையும் மிகப்பெரிய நன்மை. இப்படிப்பட்ட குணங்கள் பிறப்பிலும் நம்மிடமில்லை, வளரும்போதும் நாம் உருவாக்குவதில்லை. ஆகையால் நாம் நன்மை செய்ய ஒரே ஒரு வழிதான் உள்ளது. அது, நன்மை மாத்திரம் செய்த ஒருவரை தகப்பனாக ஏற்றுக்கொள்வதுதான். அப்பொழுது, நாம் அவருடைய விலாசத்திற்குள்ளாக, நன்மையான பிள்ளையாக குடி புகமுடியும்; இதுதான் மறுபடியும் பிறக்கும் அனுபவம்.

சங்கீதம் 27:13, இப்படியாக கூறுகின்றது, "நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையை காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்".

ஜீவனுள்ளோர் தேசம் பரலோகம்; அப்படியென்றால் பரலோகத்திலே நன்மையை காணமுடியும். ஆனால் நாம் எப்படி அங்கே போவது? அந்த நன்மையை காண்பது. **இயேசு கிருஸ்து நன்மை செய்பவராகவே சுற்றித்திரிந்தார் என்று வேதம் சொல்கின்றது.**

**எதற்காக அவர் அப்படி செய்தார்?**

தேவன் தமது அன்பின் வெளிப்பாடாகிய கிருபையை, நன்மையாக இந்த பாழும் உலகிற்கு பரிசளித்தார். எதற்காக? பாவிகள் மனமாற வேண்டும் என்ற புனித நோக்கத்திலே.

**யார் இந்த பாவிகள்?**

*அநீதியில் பிரியப்பட்டு, தீமையை (பிசாசை) பின்பற்றிய-வர்கள்.*

*ஒருவன் நன்மையை (இயேசுவை) தேட, முதலில் தீமையைவிட்டு விலக வேண்டும் (சங்கீதம் 34:14). அப்படியென்றால், அவன் தான் ஒரு பாவி; அநீதியில் வாழ்கின்ற தேவ மகிமையற்ற மண் என்பதை, உள்ளத்தில் உணரவேண்டும். தீமையின் விலாசத்தை உணருதலே பாவகுற்றத்தை அறிதல். உணர்ந்தவன் சமாதானத்தை (சிலுவையை) தேடி, அதை தொடர்ந்து கொள்ள வேண்டும். இவன் (பாவத்தை உணர்ந்தவன்) கூப்பிடுவான், அப்பொழுது ஞானம் (பரிசுத்தமானவர்) இதோ இருக்கிறேன் என்று பதில-ளிப்பார்.*

***ஞானஸ்தானம் தேவாதி தேவன் நம் உள்ளத்தில் வந்து வாசம் செய்யும் உன்னத பரிமானம்.***

*ஞானஸ்தானம் நான்கு வகை காரியங்களை உள்ளடக்கியதாக வேதம் கூறுகின்றது.*

- *தீமையின் விலாசத்தை உணருதல் (தேவ நீதியை ஏற்றுக்-கொள்ளுதல்)*
- *அடக்கம் பண்ணப்படுதல் (தேவ தீர்ப்பை அடைதல்; பாவத்தின் சம்பளம் மரணம்)*
- *நன்மையின் விலாசத்தை பெறுதல் (தேவ கட்டளையை)*
- *சமாதானத்தை அறிவித்தல் (தேவனோடு ஒப்புருவாகுதல்)*

*தேவ நீதி*: ஆதியாகம் 2:16,17
*தேவ தீர்ப்பு*:ரோமர் 5:12, 14; 6:4
*தேவ கட்டளை*: ரோமர் 5:10; 6:7, 8, 23
*தேவ பிள்ளை*: ரோமர் 8:15, 16

மேற்கூறியவைகள் ஒருவரது வாழ்விலே நடைபெறும் உன்னத நிகழ்வுகள். நாம் பரலோகத்து உறவுக்காரனாகும்படி, அளிக்-கப்பட்ட தேவனுடைய பரிவுகள்.

மனிதன் இரண்டு வகையான அமைப்புகளை கொண்டவன். அவை முறையே,

- சரீர அமைப்பு,
- ஆவிக்குரிய அமைப்பு.

இந்த இரண்டு அமைப்புகளும் சுத்தமாக வேண்டும்.

**"ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கமாட்டான்"**, என்று தெளிவுப்படுத்தியிருக்கின்றார் நம்முடைய கர்த்தராகிய இயேசு-கிருஸ்துவானவர் (யோவான் 3:5).

## சரீர அமைப்பு பாதுகாக்கப்படுதல்

ஆவிக்குரிய அமைப்பை சுமந்திருக்கும் சரீரம் தேவனுடைய ஆலயமாகும். நாம் தேவனை ஆராதிக்க பயன்படும் இந்த அமைப்பு, முதலில் பரிசுத்தமாக வைக்கப்பட வேண்டும். இதைத்தான் ஏதேன் தோட்டத்தில், தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் செய்துவைத்தார். இங்கே, தேவன், சரீரசுத்தத்-திற்காக, பாவ நிவாரண பலியை ஏற்படுத்துகின்றார். பிறகு மோசேயின் காலத்திலே இது நியாயப்பிரமாணமாக இஸ்ர-வேலருக்கு அளிக்கப்பட்டது. ஆனால், வேத அடிப்படையில் பார்த்தோமென்றால், தண்ணீரினால் ஞானஸ்தானம் பெற்ற-வர்கள், நோவாவும் அவனோடு பேழையிலிருந்த சகல ஜீவ ராசிகளும்தான் (ஆதியாகமம் 7:12,13). தேவ நீதியின்படி, ஒருவன் முழுவதும் நீரினால் கழுவப்பட்டபிறகு, கால்களை கழுவினால் போதும், அவனது சரீரம் சுத்தமாக உள்ளது (யோவான் 13:10). இதைக்குறித்து மேலும் வேதம் என்ன நமக்கு போதிக்கின்றது.

இஸ்ரவேலின் தேவன் மூன்று முக்கிய பலிகளை குறித்து, மோசேக்கு கட்டளை கொடுத்தார் (யாத்திராகமம் 29:10-28).

- பாவ நிவாரண பலி (பாவத்தை நிவிர்த்தி செய்ய)
- சர்வாங்க தகன பலி (கர்த்தருக்கு சுகந்த வாசனையாக)
- சமாதான பலி (ஆத்தும சமாதானத்திற்காக)

இந்த மூன்றும் இரத்த சம்பந்தமானது. இரத்தம் தெளிக்கப்படுதல் பரிசுத்தமாகுதலை குறிக்கின்றது (யாத்திராகமம் 29:20, 21).

மாம்சமான சரீரம் நீரிலே முழுகியப்பிறகு (யாத்திராகமம் 29:4), இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படவேண்டும். இந்த சரீர ஞானஸ்தானம், உலகத்திலிருந்து நம்மை பிரித்து, தேவனுடைய பிள்ளைகளாய் மாற்றுகின்றது (II கொரிந்தியர் 6:17,18).

பாவ அறிக்கையும், விசுவாசப்பிரமாணமும், ஸ்தோத்திரமும், கிருபையின் காலத்திலே நாம் செலுத்தும் மேற்கூறிய மூன்று பலிகளாக தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**இயேசு கிருஸ்துவை நம்முடைய இரட்சகராக அறிக்கை செய்வதின் அர்த்தம் என்ன?**

அவர் நமது பாவங்களை, தமது சரீரத்தில் ஏற்று, அந்த முழுச்சரீரத்தையும் சுகந்த வாசனையாக, தேவனுக்குப்பலி-யிட்டு, தமது சொந்த இரத்தம் சிந்தி, பாவிகளாகிய நம்மை குற்றப்படுத்தாமல், சமாதானத்தை இறுதிவரை நிலைப்படுத்தி-னபடியால், அவரே நமக்கு எல்லாமுமாக இருந்து, இம்மூன்று பலிகளையும் கல்வாரிச்சிலுவையிலே நிறைவேற்றினார் என்பதே. நம் ஆத்துமா தேவனோடு சமாதானமாக, பரலோக வாழ்வு பெற, கிருஸ்துவின் சரீரம் சுகந்த வாசனையாக படைக்கப்பட்டுள்ளது. இதை நாம் விசுவாசித்து, நீரினால் கழுவப்படும் போது (முழுக்காடல்), நாம் வெற்றியின் பிள்ளைகளாய், சமாதானத்துடன், நன்மை செய்ய புறப்படு-கின்றோம்; உலகத்திலிருந்து பிரிக்கப்படுகின்றோம்.

எந்த மனிதனும் செய்யக்கூடிய ஒரு உன்னதமான நன்மை (பரலோகம் பாராட்டகூடிய), 'இயேசுவை' இரட்சகராக ஏற்றுக்கொள்ளுவதுதான்.

## <u>ஞானஸ்தானம் பெறும் ஆத்துமா அடையும் வெற்றி</u>

படைப்பின் வரிசையிலே, தேவன் முதலில் மனுஷனை உருவாக்கவில்லை (ஆதியாகமம் 1:20-28); *மீன்கள், பறவைகள், மிருகங்கள், அதன்பிறகுதான் மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்-டார்கள்*. இதன் நோக்கமே புனிதமானது. நிலத்திலே வாழப்-பிறந்த ஆதாம், நிலத்தோடு தொடர்புடைய எல்லா ஜீவ ராசிகளுக்கும் பெயர் வைத்தான் என்று வேதம் சொல்கின்றது.

எதற்காக இந்த ஏற்பாடு?

பூமியை ஆளும் அதிகாரம் பெற்றவன், தம்மை நம்பி வாழும் உயிர்களை, பேர்சொல்லி அழைக்க வேண்டும் என்பதற்காகத்-

தான். மனுஷன் இந்த உலகிலே உயிர் வாழ, **நீர், காற்று, மற்றும் பூமி (உணவு) தேவை.** பாருங்கள் இந்த மூன்று மூல ஆதாரங்களிலும் தேவன் உயிர்களை முதலில் படைத்ததின் நோக்கத்தை. இந்த உயிர்களைப்பார்க்கும் மனிதன், தனக்குள் இருக்கும் தேவ சாயலை உணர வேண்டும்; அந்த தேவாதி தேவனை துதிக்க, அவன் மனம் வாஞ்சிக்க, தூண்டப்பட வேண்டும் எனபதற்காகவே இப்படி நிகழ்ந்தது. ஆனாலும் ஒரு சிறிய பரிசோதனை தேவைப்பட்டது; மனிதன் தன்னிலை உணர்வதற்காக. எனவே, நன்மை-தீமை கனி வைக்கப்பட்டது. நன்மையான ஒருவன், தீமையாகிப்போனதால், உன்னதத்தின் இரகசியத்தை வெளிப்படுத்த, தேவதூதரிலும் சற்று சிறியவனாகப் படைக்கப்பட்ட, மனுஷன் தெரிந்து கொள்ளப்பட்டான். எப்படிப்பட்ட பாக்கியம் பெற்றவர்கள் ஆதாமும், ஏவாளும். இங்கே முழுக்காட்சியும் அரங்கேறும் இடம் தேவ பர்வதமான ஏதேன் தோட்டம். இந்த நிகழ்வுகள் நிறைவேற, பரம தந்தைக்கும், அவரது எதிரியாகிப்போன சத்துருவுக்கும் தேவை சரீரங்கள். சர்வவல்லவர், படைப்பின் வித்தகர், மனுஷப்பிள்ளைகளை அதற்காக தெரிந்து கொண்டார். தீமையாகிப்போன சத்துருவுக்கு மனிதர்களிடம் ஒன்றுமில்லை, ஏனென்றால் அவர்கள் தேவ சாயலில் இருந்தனர். அதனால் தன்னைப்போல அவர்களை மாற்ற, மிருகத்தை தெரிந்துகொண்டான். தந்திரமுள்ள சர்ப்பம் என்று வேதம் சொல்கின்றது. **அது என்ன தந்திரம்?** சத்தம் அறியும் புத்தி. அந்த புத்தி தனது எஜமானர்களின் சத்தத்தையும், வேற்று நபரையும் வித்தியாசப்படுத்தும் பண்பு (character). இன்றும் விலங்குகளிடம் இந்த பண்பை நாம் பார்க்க முடியும். ஏன், டால்பின் என்ற மீனினம் கூட இத்தகைய பண்பை வெளிப்படுத்துவதை பார்த்து அதிசயக்கின்றனர் இந்த உலகிலே, தேவ உணர்வற்ற மனிதர்கள். ஆனால் சர்ப்பம் துல்லியமாக வித்தியாசப்படுத்தும் தன்மையைப்பெற்றதாகப் படிக்கின்றோம் (very sharp mind). பாம்பு வெகு தொலைவிலிருந்தே மற்ற உயிர்களின் நடமாட்டத்தை உணர்ந்து கொள்ளும் ஆற்றல் உடையது. **பிறகு எதற்கு அது சாத்தானின் வலையிலே விழுந்தது?** பெருமைதான் காரணம். சர்ப்பம் ஊரும் பிராணியாகப் படைக்கப்படவில்லை என்று வேதம் இந்த வசனத்தின் மூலம் விளக்குகின்றது (ஆதியாகமம் 3:14). மிகவும் அழகான ஒரு விலங்கினம், சர்ப்பம் (a very delicate, subtle wild animal).

**விலங்கினங்கள் இசைக்கு அடிமையாகுமா?**

இந்த 21ம் நூற்றாண்டிலே எல்லோரும் ஒத்துக்கொள்ளக்கூடிய ஒரு சாதரண விஷயம் இது. மிருகங்கள் இசைக்கேற்றவண்ணம் ஆட்டமே போடும் மாய தந்திர உலகம் இன்று நாம் வாழும் பூமி. ஒருவன் இதை அவைகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும். இதைத்தான் சாத்தான் சர்ப்பத்திற்கு கற்றுக்கொடுத்தான். **"பாவம் செய்கிற எவனும் அந்த பாவத்திற்கு அடிமையாகிவிடுகிறான்".** சர்ப்பமும் அப்படித்தான். எசேக்கியேல் 29:12-19 ல், இப்படி வாசிக்கின்றோம். சாத்தான் தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் (பரமண்டலங்களில்) இருந்தவன். இதைப்போன்ற ஒரு தோட்டத்தைத்தான் தேவன் பூமியிலும் உருவாக்கியிருக்க வேண்டும். சாத்தான் பூரண அழகுள்ளவன், ஞானமுள்ளவன், விசித்திரமான முத்திரைமோதிரம். இவன் சிருஷ்டிக்கப்பட்ட நாளிலே, மேள வாத்தியங்களாலும், நாத சுரங்கங்களாலும் அபிஷேகம் பெற்றவன். இவன் ஆராதனைத்தலைவன். தனக்கு அளிக்கப்பட்ட இசை ஞானத்தை, தவறாகப்பயன்படுத்தி, சர்ப்பத்தை தன் வலைக்குள் இழுத்துக்கொண்டவன். இசையிலே விழுந்த சர்ப்பம் பெற்றுக்கொண்டது, தேவனின் சாபத்தையும், மனிதனின் தூபத்தையும். இருளின் இராஜ்ஜியம், ஆதி முதல், சாத்தான் தேவனிடம் பெற்ற இந்த இசை வரத்தினால் கட்டப்பட்டும், எழுப்பபட்டும் வந்துள்ளது. சர்ப்பம் புத்தியுடன் படைக்கப்பட்டு, தந்திரமான பிராணியானது; இவனது இசைக்கு பலர், அதனால் இன்றும் தந்திரமாக ஏமாற்றப்பட்டு வருகின்றார்கள், இவனை புரிந்து கொள்ளாமல்.

**ஞானஸ்தானத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?**

சர்ப்பத்தின் சரீரத்தின் மூலம் பூமியில் நுழைந்த சாத்தான், மனிதரின் வாழ்வில் தீமையாகிப்போனான். மனிதன் நன்மையை (தேவனை) மறந்து, தீமையைப்பிறப்பிக்க (சாத்தானின் இச்சைகளை) அநுதினமும் கர்ப்பவேதனைப்படுகின்றான். இப்பொழுது பாருங்கள், தேவன் காயினிடம் கேட்ட கேள்வி எவ்வளவு உத்தமமானது என்று. "நன்மை செய்தால் மேன்மையில்லையோ!". தேவ வார்த்தைக்கு (இயேசுவுக்கு) கீழ்ப்படிந்திருந்தால், தனது சொந்த சகோதரனை கொலை செய்து இருக்கமாட்டான் காயின்.

நம்முடைய சரீரம், பிசாசிடமிருந்து பாதுகாக்கப்பட, அது சுத்தம் செய்யப்பட வேண்டும். சரீர தோஷம் நீங்க நீர் தெளிக்க சொல்கின்றது உலகம்; பாவம் நீங்க புனித ஆற்றில் முழுகச்சொல்லுகின்றது. ஆனால், சாபமான பூமியிலே, இயேசு

என்ற நாமம் ஒன்று மாத்திரமே ஆசிர்வாதமானது (புனித-மானது).

**வேதம் நமக்கு என்ன போதிக்கின்றது?**

இயேசு முழுகி ஞானஸ்தானம் எடுத்தாரென்று வாசிக்கின்றோம். அவர் வழியில் நடப்பது சத்தியமானது. சரீர பாதுகாப்பு நாம் பெறும் முதல் வெற்றி. லூக்கா 22:3, 21, 22 மற்றும் யோவான் 13:26, 27 ல், சாத்தான் யூதாஸ்காரியோத்தின் உள்ளத்திலே புகுந்தான் என்று வாசிக்கின்றோம். இரட்சகர் இயேசுவுடன் சுவிஷேச ஊழியத்தில் பங்கெடுத்த இவன், பிசாசின் எண்ணங்-களுக்கு செயல் வடிவம் கொடுத்ததின் விளைவு, சத்துரு இவனது உடலை அபகரித்து கொண்டான். இங்கே ஒரு விஷயத்தை நாம் தெளிவாய்த்தெரிந்து கொள்ளுதல், நமக்கு நலமாயிருக்கும். **எந்த ஒரு மனிதனின் சரீரத்துக்குள் புகுமுன், சாத்தான் அந்த மனுஷனை தன்னைப்போல மாற்றியாக வேண்டும்.** இது தேவ நீதி (Principle of God). கடவுள் தமது நீதியினாலே விளங்குபவர்.

தேவ குமாரன், தம்மைப்போல நம்மை மாற்ற மாம்ச ரூபமானார்.

**ஏன் பிசாசும் அவனது அசுத்த ஆவிக்கூட்டமும் சரீரங்களை தேடி அலைகின்றார்கள்?**

ஆத்துமா தேவ இராஜ்ஜியத்திலே விதைக்கப்படவேண்டிய ஒரு நித்திய ஜீவனின் விதை. ஆனால் அது இந்த உலகிலே தேவ வார்த்தைகளினால் பண்படுத்தப்பட்டு, தேவ ஆவியினால் வளர்க்கப்படவேண்டும். அப்படி உருவாகும் போது, ஒரு ஆராதனைக்காரர் (worshiper) பரலோகத்திலே தேவப்பிள்ளை-யாகின்றார் (லூக்கா15:10).

**இந்த இரட்சிப்பு திட்டம் தொடருமா; எதுவரை?**

தேவன் முன்குறித்தவர்கள் அனைவரும் காப்பாற்றப்படும்வரை. எத்தனை பிள்ளைகள் தேவை?; பரம தந்தை ஒருவரே அறிவார். இந்த இரட்சிப்பை தடுப்பதின்மூலம் துன்மார்க்கனான பிசாசும் அவனது தூதர்களும், கொஞ்ச காலம் தண்டனையிலிருந்து தப்பித்துக்கொள்ளுகிறார்கள்.

**நாம் இவர்களுக்கு (கொலை பாதகர்களுக்கு) உதவலாமா?**

ஞானஸ்தானம் உடனே எடுப்போம்; சரீரத்தைப்பாதுகாப்போம்.

## *பிசாசு ஆத்துமாவைத் தாக்குகிறான்*

*ஆத்துமா ஆவியின் சரீரம். அதனால் அது ஆவிக்குரிய உணர்வுகளை உருவாக்கும் பெலன் பெற்றது. ஆயினும் நன்மை-தீமை பாதையில், சரீரம் மிக முக்கிய பங்கு வகிப்பதால், ஆத்துமா சரீர உணர்ச்சிகளையும் தோற்றுவிக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. வார்த்தைகள், எண்ணங்களை உருவாக்கு-கின்றது. அப்படி-யென்றால் எந்த வார்த்தைகளின் அடிப்-படையில் நம் சிந்தனை வாழ்வு* (thought life) *அமைகின்றதோ, அதற்கேற்ப நம்முடைய ஆத்துமாவின் நிலையும் அளவிடப்-படும். தேவன் ஆவிகளை நிறுத்திப்பார்க்கிறவர். ஒரு நினைவு விதைக்கப்பட்டு* (thought state), *மனதிலே* (processor) *உருப்-பெற்றுவிட்டால்* (image state), *அது உணர்ச்சிகளாக வெளிப்-படும் இடம் ஆத்துமா.* ***இதில் ஆவியின் பங்கு என்ன?***

*ஆவி, ஆத்துமா முழுவதும் பரவியுள்ள உயிர்* (operating system with inbuilt memory). *இந்த புனிதமான அமைப்புக்கு வேண்டிவர்கள் இருவர் உண்டு.*

- *தேவ வார்த்தை* (Word of God)
- *தேவ ஆவி* (Spirit of God)

*இந்த இருவரின் துணையுடன் ஒரு ஆத்துமா, தனது உலகப்-பயணத்தை துவக்கினால், அது உருவாக்கும் பண்புகள்* (System commands), *கர்த்தரின் கட்டளைகளாக இருக்கும். அப்படி-யில்லையென்றால், ஆவி செத்த நிலையடையும் (தேவ சாய-லிழந்த நிலை* - Spiritually dead state).

***பிறகு எப்படி நாம் உயிர் வாழ்கின்றோம்?***

*நாம் கண்களால் காணும், சரீரத்தால் உணரும் மற்றும் செவிகளால் கேட்கும் உலக விஷயங்கள் பல, பாட்டிக்-கதைகளாகி பிறகு நாளடைவில், அவை வேதங்களாக கருதப்படுகின்றது. நமது ஆவியை இப்படிப்பட்ட உலக ஞானத்தினால் போஷித்து வந்தால், அது தேவ ஞானமின்றி, தேவ சாயலை இழந்து, உலக சாயலை முற்றும் பெற்று, உலக காரியங்களை குறித்து அதிகம் சிந்திக்க தூண்டும். ஆத்துமா உலக உணர்ச்சிகளால் நிரப்பபடும் போது, ஆவியும் அப்படியே உலகையே சார்ந்து இருக்கும். ஒரு மனிதனின் ஆவி பொல்-லாததாக மாறும்போது, அவன் சாத்தானின் பிள்ளையாகிறான்.*

அப்படித்தான் யூதாஸ்காரியோத்தும் தனது மனதை முதலில் சாத்தானுக்கு விற்றுப்போட்டான். **எப்படி?**

யூதர்களுக்கு ரோம இராஜ்ஜியத்திடமிருந்து சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்று விரும்பியவன் இவன். அதற்கு யூதாஸ் தெரிந்து கொண்ட வழி, கர்த்தரின் வல்லமை (mighty power). இரட்சகர் இயேசு கிருஸ்து நடப்பித்த அற்புதங்களை கண்ட இவன், அவரைக்கொண்டு இஸ்ரவேலரின் விடுதலையைக்குறித்து கனவு காண ஆரம்பித்தான். இது ஒன்று போதுமே, சத்துருவுக்கு, ஒரு ஆத்துமாவை புரட்டி எடுப்பதற்கு. **நமது கற்பனை வாழ்வை நாசம் பண்ணும் மோசக்காரன் சாத்தான் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்.** ஆகையால் தான் தேவன் நமக்கு தேவையான எல்லா கற்பனைகளையும் வேதமாக கொடுத்திருக்கின்றார். தவறான எண்ணங்கொண்டு யூதாஸ், கிருஸ்துவோடு ஜீவித்து வந்ததால், அவரது வல்லமையான வார்த்தைகள் அவனது உள்ளத்தை தொடுவதற்கு அவை பெருந்தடையாகிப்போனது. **இவனது ஆசை பூமியைச்சார்ந்திருந்தது. அது சாத்தானுக்கு மிகவும் பிரியமாயிருந்தது.**

யூதாஸ் இயேசுவின் சீஷன்தான்; அவரோடு சுவிஷேச ஊழியத்தில் பங்கெடுத்தவன்தான்; ஞானஸ்தானம் கூட பெற்றிருந்திருக்கலாம். ஆனாலும் அவனது ஆத்தும வாஞ்சை, உலக வாழ்வை சார்ந்திருந்தது. சரியான இடத்தில் இருந்தாலும், முறையான வழிபாடு செய்தாலும், ஆத்துமா தேவ திட்டத்தை உணராவிட்டால், அது பலன் கொடுக்க முடியாதபடி, சாத்தான் பல தடைகளை கொண்டு வருவான். இன்றைக்கு, நம்மில் பலரும் இந்த சூழ்திலையில் இருப்பதை உணர வேண்டும். **நம் எண்ணங்கள் உருவாக்குவது தேவ சாயலையா அல்லது உலக சாயலையா?** சற்றே சிந்திப்போம்!.

இருந்தாலும், நம் கர்த்தர் ரொட்டி துணிக்கையை கொடுக்கும் வரை சாத்தானால், யூதாஸின் சரீரத்துக்குள் புக முடியவில்லை. தேவனை நாம் மனப்பூர்வமாக மறக்கும் போது, அவர் நம்மை துன்மார்க்கனிடம் ஒப்படைத்து விடுவார். இயேசு கொடுத்த ரொட்டி துணிக்கை, அவரது சரீரமாக விசுவாசிக்கப்படுகின்றது.

**இருந்தும் எப்படியூதாஸின் உள்ளத்தில், சாத்தான் புக முடிந்தது?**

யூதாஸ் தனது சுயாதீனத்தை (freewill), சாத்தானுக்கு விற்றுப்போட்ட ஒரு விசுவாச துரோகி. இன்று நம்மில் எத்தனை பேர் இவனைப்போல வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம்? நாம் ஞானஸ்தானம் பெற்று, சரீர பாதுகாப்பை அடைந்திருந்தாலும், சரீர ஆசைகளுக்கு, நம்மை ஒப்புக்கொடுத்து ஒரு மாம்சீக கிருஸ்தவராக (Carnal Christian) வாழ்ந்து வந்தால், காலப்போக்கில் நாம் ஒன்றுக்கும் பிரயோசனப்படாமல், யூதாஸைப்போல அழிந்துபோக வாய்ப்புண்டு. ஆகையால், சரீர ஞானஸ்தானம் பாதுகாப்பை கொடுத்திருக்கின்றது என்பது உண்மை; ஆனாலும் நாம் தேவ சாயலாய் மாற அடுத்து பெற வேண்டிய ஒரு முக்கிய ஆவிக்குரிய ஞானஸ்தானம் வாக்களிக்கப்பட்டிருப்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

## கர்த்தர் தரும் ஞானஸ்தானம்

- பரிசுத்தாவியின் ஞானஸ்தானம்
- அக்கினியின் ஞானஸ்தானம்

(ஏசாயா 28:11; 55:1; 1 கொரிந்தியர் 12:13;14:2, 13)

பிதா, குமாரன், பரிசுத்தாவியின் நாமத்தில் மனிதன் பெற்றுக்கொள்ளும் முழுக்கு ஞானஸ்தானம், அவனது சரீரத்தை பாதுகாக்க உதவும். தேவன், நம்மை முதலில் இந்த உலகத்திலிருந்து பிரிந்து, அசுத்தமானதை (சாத்தானின் இச்சைகளை) தொடாமல், அவருடைய உன்னத பெலத்திற்காக காத்திருக்கும்படி கூறுகின்றார்.

**எதற்காக?**

தேவன் வாக்களித்திருக்கும் உன்னத ஞானஸ்தானத்தை பெற்றுக்கொள்வதற்காக. இது ஆத்துமா சம்பந்தமானது. ஆத்துமா தேவ சாயலை அடையும் நிலை. அப்படியென்றால், நாம் கர்த்தர் தரும் ஞானஸ்தானத்தை நிச்சயமாக பெற வேண்டும். இந்த உன்னத பெலத்தை பெற்ற உடன், ஆவிக்குரிய யுத்தம் ஆரம்பமாகின்றது. தேவன் தமது பிள்ளைகளுக்கு இரண்டுவிதமான ஆசிர்வாதங்களை வைத்திருக்கின்றார். ஆசிர்வாதம் ஆவிக்குரிய விஷயம் (III யோவான் 2).

- முதலாவதாக, தங்கள் சொந்த வாழ்க்கை, குடும்பம், மற்றும் சபை சம்பந்தமான காரியங்களில் பரிசுத்தமாக

இருப்பதற்கு பரிசுத்தாவியின் அபிஷேகம் (விசுவாசம் வளர).

- இரண்டாவதாக கட்டுண்டவர்களை விடுவிக்கவும், பொல்லாத பிசாசின் ஆவிகளை விரட்டவும், நோய்களை குணமாக்கவும், சுவிசேஷம் அறிவிக்கவும், கர்த்தர் தருவது அக்கினியின் அபிஷேகம் (ஊழியம் வளர).

நோய்கள் பாவத்தின் வெளிப்பாடுகள்; இவை நம் சரீரத்திற்குள்ளாக வருவதற்கு முக்கிய காரணம், இச்சைகள், சாபங்கள், பாவங்கள். கொண்டு வருபவர்கள் பிசாசின் பொல்லாத ஆவிக்கூட்டம். ஆமாம், மனிதன் ஏதேனில் நோயின்றி சுகமாய் வாழ்ந்தவன். அவன் ஆளும் அதிகாரத்தை இழந்ததும், பாழும் நோய்க்கிரிமிகள் அவனைத் தாக்க ஆரம்பித்தன. இதனால் அவனது ஆத்துமா, ஆவி, மற்றும் சரீரம் மூன்றிலும் வேதனை. இப்படி ஒன்றுக்கும் உதவாத நம்மைத்தேடித்தான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வந்தார். ஒன்றுமில்லாத நம்மை, தமது சிலுவைமரணத்தினாலே, தேவனோடு இனைத்து, தமது உயிர்த்தெழுதலினாலே நித்திய ஜீவனுக்குள் பிழைத்திருக்கும்படி செய்திருக்கின்றார். கிறிஸ்துவுக்குள் பிழைத்துள்ள நாம், வெற்றி சிறந்திட தேவை மேற்க்கூரிய ஆசிர்வாதங்கள். தருபவர் தேவஆவியானவர். இந்த பாவமான உலகிலேயே, தமது பிள்ளைகள் பரிசுத்தமாக வாழ்வதற்கு, தேவனளித்திருக்கும் அற்புதமான ஆசிர்வாதங்களை பெற்று அவருக்கு சாட்சியாக ஜீவிப்போம்.

ஆமென்,

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.